29. சபை எடுத்துக்கொள்ளப்படுதலும், இறுதி நாட்களும் .............561
30. ஆவிக்குரிய யுத்தம் குறித்த நவீன கட்டுக்கதைகள், பகுதி 1 ...607
31. ஆவிக்குரிய யுத்தம் குறித்த நவீன கட்டுக்கதைகள், பகுதி 2 ...663
32. உக்கிராணத்துவம் .............................................................729
33. சுவிசேஷ ஊழியத்தின் இரகசியங்கள் .................................751
கடைசி வார்த்தைகள் ......................................................... 777

# முன்னுரை

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் உலகத்தின் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் பயணமாகச் சென்று, மூன்று நாள் மற்றும் ஐந்து நாள் கருத்தரங்குகளில் பல்லாயிரக்கணக்கான ஊழியர்களுக்குப் போதிக்கும் சிலாக்கியத்தை நான் பெற்றிருக்கிறேன். கிறிஸ்துவின் சரீரத்துக்குள்ளாகப் பல்வேறு சபைப்பிரிவுகளைச் சேர்ந்த அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவ தலைவர்கள் இந்தக் கருத்தரங்குகளில் கலந்துகொண்டார்கள். மூன்று மற்றும் ஐந்து நாள் மாநாடுகள் இருக்கும் தேவைகளைச் சந்திக்கப் போதுமானவையாக இல்லை என்பதை ஒவ்வொரு பயணமும் உறுதிப்படுத்தியது. கிறிஸ்தவ தலைவர்களை ஆயத்தப்படுத்த இன்றும் அதிகமாகச் செயல்பட வேண்டியிருக்கிறது. இந்தப் புத்தகமானது இந்தத் தேவையை ஓரளவு சந்திக்கும்படியாக எழுதப்பட்டுள்ளது.

சபைகளுக்குப் போதகராக ஊழியம் செய்வதில் இருபதாண்டு கால அனுபவத்தைப் பெறும் சிலாக்கியமும் எனக்குக் கிடைத்திருக்கிறது. சில அளவுகோல்களின்படி நான் ‘‘வெற்றிகரமானவனாகக்’’ கருதப் பட்டாலும், வேதாகமரீதியான ஊழியத்தைக்குறித்த சில அடிப்படைக் கொள்கைகளைப் புரிந்துகொள்ளுவதில் நான் குறைவுபட்டபடியால் பெரும்பாலான வேளைகளில் போராட வேண்டியிருந்தது. இதன் விளைவாக, நான் இழந்துபோனதைத் தாங்களும் இழந்துபோகும் இலட்சக்கணக்கான உண்மையுள்ள ஊழியர்களுக்காக ஆழ்ந்த அக்கறை கொண்டிருக்கிறேன். அவர்களுக்கு முன்னிருக்கும் பணிக்காக அவர்கள் இன்னும் சிறப்பாக ஆயத்தப்படுத்தப்பட வேண்டி யிருக்கிறது. நான் புரிந்துகொள்ளுவதில் குறைவுபட்ட சில கொள்கை கள் மிக முக்கியமானவை, அவைகளைப் புரிந்துகொள்ளும்போது அவை ஒரு ஊழியரின் எஞ்சிய வாழ்க்கை செல்ல வேண்டிய திசையைச் சுட்டிக்காட்டுகின்றன. துவக்க அத்தியாயங்களில் இந்தக் கொள்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன, வாசகர்கள் அவைகளைக் காணத் தவறக் கூடாது. இந்த அஸ்திபாரம் இல்லாமல் எஞ்சிய அத்தியாயங்கள் பயனற்றவையாகவே இருக்கின்றன.

இந்தப் புத்தகம் குறிப்பாகப் போதகர்களுக்குப் பொருத்தமானது. ஏனென்றால் இவர்களே பொதுவாக அதிகமாகக் காணப்படும் கிறிஸ்தவத் தலைவர்களாவர். ஆனால் நான் எழுதியுள்ள எல்லாமே சுவிசேஷகர்கள், ஆசிரியர்கள், அருட்பணியாளர்கள், சபை ஸ்தாபிப்ப

வர்கள், ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் இவர்களுக்கும்கூடப் பொருத்த மானதாக இருக்கிறது. கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள எல்லோருமே இந்தப் புத்தகத்தைப் படிப்பதினால் பயனடைய முடியும். ஏனென்றால் எல்லோருக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட பணி இருக்கிறது.

அடிப்படையில் நான் அமெரிக்க ஐக்கிய நாடுகள், மேற்கு ஐரோப்பா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து பகுதிகளுக்கு வெளியே வாழும் ஊழியர்களுக்காகவே இதை எழுதியிருக்கிறேன். அதற்காக, இந்தப் பகுதிகளும் வாழும் ஊழியர்களுக்கு இது பொருத்தமில்லாதது என்று சொல்லிவிட முடியாது. உண்மையில், நான் எழுதியிருப்பது அவர் களுக்கு உதவியாக இருக்குமென்றாலும், ஒருசிலரே செவிகொடுப்பது போலத் தோன்றுகிறது. எப்படியிருப்பினும், உங்கள் அறிவு, அனுபவம், ஊழியம்செய்யும் நாடு இவைகளுக்கு ஏற்றபடி சில அத்தியாயங்கள் மற்றவைகளைவிட உங்களுக்கு அதிக உதவியாக இருப்பதை நீங்கள் காண்பீர்கள். எடுத்துக்காட்டாக, சீனாவின் போதகர்கள் வீட்டுச்சபை களைக் குறித்து நான் எழுதியிருப்பவைகளை ஏற்கெனவே அறிந்திருப் பார்கள். என்றாலும், வீட்டுச் சபை மாதிரியை அறியாத போதகர்களுக்கு இந்த அத்தியாயம் அதிக உதவியாக இருக்கும்.

இந்தப் புத்தகத்தில் ஒவ்வொரு தலைப்பைக் குறித்து நான் எழுதியிருக்கும் எல்லாவற்றையும் எல்லா வாசகர்களும் ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. என்றாலும் ஒவ்வொரு அத்தியாயத்திலிருந்தும் ஏதேனும் சில காரியங்களைக் கற்றுக் கொள்ளுவதை அது தடுக்க இடம்கொடாதிருங்கள்.

இயேசுவானவர் நமக்குப் போதித்தபடி எவரும் புதிய இரசத்தைப் பழைய துருத்திகளில் ஊற்ற மாட்டார்கள். அப்படிச் செய்தால் விறைத்துப் போயிருக்கும் துருத்தி பிளவுபட்டுவிடும். நுரைத்துப் பொங்கும் புதிய இரசத்தின் அழுத்தத்தைத் தாங்க வளைந்துகொடுக்கக் கூடிய புதிய துருத்திகளினால் மட்டுமே முடியும். நான் எழுதியிருப்பவை களில் சில புதிய இரசம் என்று கருதப்பட்டாலும், உண்மையில் இது மிகவும் பழைமையான இரசமாகும் – புதிய ஏற்பாட்டைப்போல அதுவும் பழைமையானதாகும். எனவே எந்தவொரு பழைய துருத்தியும் கிழிந்து போவதற்கு அடுத்துவரும் பக்கங்களிலிருந்து ஊற்றப்படும் இரசம் காரணமல்ல! தேவன் தமது சத்தியத்தை ‘‘ஞானிகளுக்கும் கல்விமான் களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால்’’ இயேசு களிகூர்ந்தார் [மத். 11:25]. இதைப்போலத் தேவன் தாழ்மையுள்ளவர் களுக்குக் கிருபையளிக்கிறார், பெருமையுள்ளவர்களையோ எதிர்த்து நிற்கிறார் [பார்க்க, யாக். 4:6]. உலகெங்கிலுமுள்ள தாழ்மையுள்ள திரளான கிறிஸ்தவத் தலைவர்களுக்காகத் தேவனுக்கு ஸ்தோத்திரம். இதை வாசிக்கும்போது தேவன்தாமே அவர்களை ஆசீர்வதிப்பாராக!

**டேவிட் கர்க்வுட்**



## 1

# சரியான இலக்கை நிறுவுதல்

ஒரு ஊழியர் தேவனுடைய பார்வையில் வெற்றிகரமானவராக இருக்க வேண்டுமானால், தேவன் தனக்கு முன்பாக நிறுவி யிருக்கும் இலக்கை அவர் புரிந்துகொள்ள வேண்டும். தனது இலக்கை அவர் புரிந்துகொள்ளாவிட்டால், அதை எட்டுவதில் தான் வெற்றி பெறுகிறோமா அல்லது தோற்றுப்போகிறோமா என்பதை அவரால் அளக்க முடியாது. உண்மையில் தான் தோற்றுப்போயிருக்கும் வேளை யில் அவர் தான் வெற்றிபெற்றதாக நினைத்துக்கொள்ளலாம். இது மிகவும் சோகமான காரியமாகும். அவர் தான் 1600 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொண்டிருக்கிறோம் என்பதை உணராமல், 800 மீட்டர் பந்தயத்தின் முடிவு எல்லை வந்தவுடன் வெற்றிபெற்றுவிட்ட தாக நினைத்துக் கூடியிருப்பவர்களைப் பார்த்துக் கையசைக்கும் ஓட்டப் பந்தய வீரரைப்போல இருக்கிறார். தனது இலக்கை அவர் தவறாகப் புரிந்துகொண்டது அவர் தோல்வியடையும்படி செய்துவிட்டது. தான் வெற்றிபெற்றுவிட்டோம் என்று நினைத்தது அவருடைய இழப்பை உறுதிப்படுத்தியிருக்கிறது. இவரைப் பொருத்தவரையில் ‘‘முந்தினோர் அநேகர் பிந்தினோராயும்... இருப்பார்கள்’’ என்பது உண்மையாக இருக்கிறது!

பெரும்பாலான ஊழியர்கள் ஏதேனும் ஒருவகைப்பட்ட இலக்கைக் கொண்டிருக்கிறார்கள், இதை அவர்கள் ‘‘தரிசனம்’’ என்று அழைக் கிறார்கள். தனது திட்டவட்டமான அழைப்பு மற்றும் வரங்களின் அடிப்படையில் இதை எட்டவே அவர்கள் முயலுகிறார்கள். ஒருவர் ஒரு குறிப்பிட்ட பட்டணத்தில் போதகராக இருந்தாலும் சரி, ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தில் நற்செய்தி அறிவித்தாலும் சரி, அல்லது குறிப்பிட்ட சத்தியங்களைப் போதித்தாலும் சரி, ஒவ்வொருவருடைய அழைப்பும், வரமும் தனிச்சிறப்பானதாகும். ஆனால் நான் குறிப்பிடும் தேவனால் கொடுக்கப்பட்ட இலக்கு பொதுவானதாகும், இது எல்லா ஊழியருக் கும் பொருத்தமானதாகும். இதுவே பிரதான தரிசனமாகும். இதுவே

ஒவ்வொரு தனிச்சிறப்பான தரிசனத்துக்கும் பின்னால் இயக்குவிக்கும் பொதுவான தரிசனமாகும். ஆனால் பெரும்பாலும் அப்படியிருப்ப தில்லை. பல ஊழியர்கள் தேவனுடைய பொதுவான தரிசனத்துக்கு இசைவாக இல்லாத திட்டவட்டமான தரிசனத்தைப் பெற்றிருப்பது மட்டுமின்றி, சிலர் தேவனுடைய பொதுவான தரிசனத்துக்கு *விரோத மாகச்* செயல்படும் தரிசனங்களையும் கொண்டிருந்தார்கள். ஒரு காலத்தில் ஒரு வளர்ந்துவரும் சபைக்கு நான் போதகராக இருந்தபோது அப்படிப்பட்ட தரிசனத்தைக் கொண்டிருந்தேன்.

தேவன் *ஒவ்வொரு* ஊழியருக்கும் கொடுத்திருக்கும் பொதுவான இலக்கு அல்லது தரிசனம் என்ன? இதற்கான பதிலை நாம் மத்தேயு 28:18—20 வசனங்களில் காணத் துவங்குகிறோம். இந்தப் பகுதி நமக்கு மிகவும் அறிமுகமான ஒரு பகுதியாக இருக்கிறபடியால், பெரும்பாலும் அது என்ன கூறுகிறது என்பதைக் காணத் தவறிவிடுகிறோம். அதை நாம் வசனம் வசனமாகப் பார்ப்போம்:

> அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத்தேயு 28:18).

தமது பிதாவானவர் தமக்கு *மேன்மையான* அதிகாரத்தைக் கொடுத்திருப்பதைச் சீஷர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று இயேசுவானவர் விரும்பினார். பிதாவானவர் எவருக்காவது அதிகாரத்தைக் கொடுக்கும்போது மற்றவர்கள் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று விரும்புவதுபோல இயேசுவானவருக்கு எல்லோரும் *கீழ்ப்படிய வேண்டும்* என்பதே அவருடைய நோக்கமாகும். ஆனால் இயேசு தனிச்சிறப்பானவராக இருக்கிறபடியால் அவருடைய பிதாவான வர் அவருக்கு வானத்திலும் பூமியிலும் *சகல* அதிகாரத்தையும் கொடுத் திருக்கிறார். மற்றவர்களுக்குக் கொடுப்பதுபோலக் கட்டுபடுத்தப்பட்ட அதிகாரத்தை அவருக்குக் கொடுக்கவில்லை. *இயேசு கர்த்தராக இருக்கிறார்.*

இது இப்படியிருக்கிறபடியால் எவரும் இயேசுவைக் கர்த்தராக ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர் இயேசுவோடு சரியான வகையில் உறவு கொள்ளவில்லை என்றே அர்த்தமாகும். இயேசுவானவர் வேறு எதையும்விட மேலாகக் *கர்த்தராக* இருக்கிறார். எனவேதான் அவர் புதிய ஏற்பாட்டில் 600 தடவைகளுக்கு மேல் ''கர்த்தர்'' என்று குறிப்பிடப் பட்டிருக்கிறார். (அவர் இரட்சகர் என்று 15 முறை மட்டுமே குறிப்பிடப் பட்டிருக்கிறார்). எனவேதான் பவுல் இப்படி எழுதினார்: ''கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர்மேலும் *ஆண்டவராயி*ருக்கும்பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார்'' (ரோமர் 14:9 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது). மக்களை ஆளுகைசெய்யும்படியாகவே இயேசு மரித்துப் பின்னர் உயிரோடு எழுந்தார்.





## மெய்யான இரட்சிக்கும் விசுவாசம்

சமீபகாலச் சுவிசேஷகர்களும் போதகர்களும் இரட்சிக்கப்படாதவர் களிடம் ''இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படி'' அழைப்பு விடுக்கும்போது (இந்தக் கருத்துப்படிவம் வேதவசனத்தில் காணப்பட வில்லை) அது பெரும்பாலும் சுவிசேஷத்தைப் புரிந்துகொள்ளுவதில் அவர்கள் அடிப்படையிலேயே தவறு செய்திருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, பிலிப்பி பட்டணத்துச் சிறைச் சாலைக்காரன் இரட்சிக்கப்படத் தான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோது, பவுல் ''இயேசுவை உன் இரட்சகராக ஏற்றுக்கொள்'' என்று சொல்லவில்லை. மாறாக அவர் ''*கர்த்தராகிய* இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப் படுவீர்கள்'' என்று கூறினார் (அப். 16:31 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது). மக்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து*வில்* விசுவாசம் வைக்கும்போது இரட்சிக்கப்படுகிறார்கள். இரட்சிப்பு அல்லது இயேசுவைக் குறித்த ஒரு உபதேசத்தை விசுவாசிக்கிறபடியால் அவர்கள் இரட்சிக்கப்படவில்லை, அவர்கள் *கர்த்தராகிய* இயேசு கிறிஸ்து என்னும் நபரை விசுவாசிக்கிறபடியால் இரட்சிக்கப்படுகிறார்கள். இதுவே இரட்சிக்கும் விசுவாசமாகும். அதிகமான மக்கள், இயேசுவின் மரணம் தங்கள் பாவங்களை மன்னிக்கப் போதுமான பலியாக இருக்கிறது என்றோ, அல்லது விசுவாசத்தின்மூலம் இரட்சிப்பைப் பெறுகிறோம் என்றோ, அல்லது இயேசுவையும் இரட்சிப்பையும் குறித்து வேறு நூற்றுக்கணக்கான காரியங்களையோ விசுவாசிப்பதினால் தாங்கள் இரட்சிக்கும் விசுவாசத்தைப் பெற்றிருப்பதாகவோ நினைத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் அது உண்மையல்ல. இயேசுவையும் இரட்சிப்பையும் குறித்த இந்த எல்லாக் காரியங்களையும் பிசாசான வனும் விசுவாசிக்கிறான். இரட்சிக்கும் விசுவாசம் இயேசுவில் விசுவாசம் வைப்பதை உள்ளடக்கியிருக்கிறது. அவர் யார்? அவர் *ஆண்டவராக* இருக்கிறார்.

இயேசுவே ஆண்டவர் என்று நான் விசுவாசிப்பேன் என்றால், அவரே ஆண்டவர் என்பதுபோல நடந்துகொள்ளுவேன். முழு இருதயத் தோடு என்னை அவருக்குக் கீழ்ப்படுத்துவேன். நான் அவருக்கு என்னைக் கீழ்ப்படுத்தாவிட்டால் அவரை நான் விசுவாசிக்கவில்லை என்று அர்த்தமாகும். ஒருவர் ''என்னுடைய பூட்சில் பயங்கரமான விஷப் பாம்பு இருப்பதாக நான் நம்புகிறேன்'' என்று சொல்லிவிட்டு, அமைதி யாகத் தனது காலணிகளை அணிந்துகொள்ளுவார் என்றால், தான் நம்புவதாகக் கூறும் காரியத்தை அவர் உண்மையிலேயே நம்பவில்லை என்பது வெளிப்படையாகிறது. தாங்கள் இயேசுவை விசுவாசிப்பதாகச் சொல்லியும், தங்கள் பாவங்களைவிட்டு மனந்திரும்பி, தங்கள் இருதயத்தில் அவருக்குக் கீழ்ப்படிந்திராவிட்டால், அவர்கள்

மெய்யாகவே இயேசுவில் விசுவாசம் வைக்கவில்லை. அவர்கள் கற்பனையான ஒரு இயேசுவை விசுவாசிக்கலாம், ஆனால் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் கொண்டிருக்கும் *ஆண்டவராகிய* இயேசுவை அவர்கள் விசுவாசிக்கவில்லை.

கிறிஸ்தவ சமயத்தின் மிகவும் அடிப்படையான செய்தியை ஒரு ஊழியர் தவறாகப் புரிந்துகொண்டிருப்பார் என்றால், துவக்கத்திலிருந்தே அவர் பிழை செய்கிறார் என்றுதான் அர்த்தமாகும். உலகம் கேட்க வேண்டும் என்று தேவன் விரும்பும் அவருடைய செய்தியை அவர் தவறாகப் பிரதிநிதித்துவம் செய்கிறபடியால், அவர் தேவனுடைய மதிப்பீட்டில் வெற்றிபெற முடியாது. அவர் ஒரு வளரும் சபையின் போதகராக இருந்தாலும், தேவன் தமது ஊழியத்தைக் குறித்துக் கொண்டிருக்கும் பெரிய தரிசனத்தை நிறைவேற்றுவதில் பரிதாபமாகத் தோற்றுப் போகிறார்.

## பெரிய தரிசனம்

நாம் மறுபடியுமாக மத்தேயு 28:18–19 வசனங்களுக்குத் திரும்பச் செல்லுவோம். தமது மேன்மையான ஆளுகையை அறிவித்தபிறகு இயேசு ஒரு கட்டளையைக் கொடுக்கிறார்:

> ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் [மத். 28:19–20அ].

இயேசுவானவர் ''ஆகையால்'' என்ற சொல்லைப் பயன்படுத்து வதைக் கவனியுங்கள். ''ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி'' என்று அவர் கூறினார். அதாவது, ''நான் இப்போது சொல்லியிருப்பதின் *காரணமாக*... நான் சகல அதிகாரத் தையும் பெற்றிருக்கிற*படியால்*... நான் ஆண்டவராக இருக்கிற*படியால்* ... மக்கள் எனக்குக் *கண்டிப்பாகக்* கீழ்ப்படிய வேண்டும் .... எனவே நீங்கள் போய் எல்லோரையும் சீஷராக்கி, என்னுடைய கட்டளைகள் எல்லாவற்றுக்கும் *கீழ்ப்படியும்படி* இந்தச் சீஷர்களுக்குப் போதிக்க வேண்டும் என்று *உங்களுக்குக்* கட்டளையிடுகிறேன் [நீங்கள் எனக்குக் கீழ்ப்படிய வேண்டும்].''

இதுவே பொதுவான இலக்காகவும், நமது ஊழியங்களைக்குறித்த தேவனுடைய பொதுவான தரிசனமாகவும் இருக்கிறது. *கிறிஸ்துவின் எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியும் சீஷர்களை உருவாக்கும் பொறுப்பை நாம் பெற்றிருக்கிறோம்.*

எனவேதான் பவுல் ''சகல ஜாதிகளையும், ... தமது நாமத்தினி மித்தம் *விசுவாசத்துக்குக் கீழ்ப்படியப்பண்ணும்*பொருட்டு, எங்களுக்குக்





கிருபையையும் அப்போஸ்தல ஊழியத்தையும் அருளிச் செய்திருக்கிறார்'' என்று சொல்லியிருக்கிறார் [ரோமர் 1:6–7 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. கீழ்ப்படிதலே *இலக்காகும்*. கீழ்ப்படிதலுக்கான *வழிவகை* விசுவாசமாகும். ஆண்டவராகிய இயேசுவில் மெய்யான விசுவாசம் கொண்டிருப்பவர்கள் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறார்கள்.

எனவேதான் பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு ''ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்'' என்று பிரசங்கித்தார் [அப். 2:36]. தேவன் இயேசுவை *ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்* என்று அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள் அறிய வேண்டுமென்று பேதுரு விரும்பினார். அவர்கள் யாருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று தேவன் விரும்பினாரோ அவரை அவர்கள் சிலுவையில் அறைந்துவிட்டார்கள். தவறைக் குறித்து அதிகமாக உணர்த்தப்பட்ட அவர்கள் ''நாங்கள் என்ன செய்ய வேண்டும்'' என்று கேட்டார்கள். பேதுரு முதலில் அவர்கள் *மனந்திரும்ப* வேண்டும் என்று கூறினார். அதாவது, கீழ்ப்படியாமையிலிருந்து கீழ்ப்படிதலுக்குத் திரும்ப வேண்டும். இயேசுவை ஆண்டவராக ஆக்க வேண்டும். பிறகு கிறிஸ்து கட்டளையிட்டபடி அவர்கள் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பேதுரு கூறினார். பேதுரு சீஷர்களை – கிறிஸ்துவைக் கீழ்ப்படி தலோடு பின்பற்றுகிறவர்களை – உருவாக்கிக்கொண்டிருந்தார். அவர் சரியான செய்தியோடு சரியான வழியில் துவங்கினார்.

இது இப்படியிருக்கிறபடியால், எல்லா ஊழியரும் தங்களுடைய வெற்றியைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். ''எனது ஊழியம் மக்கள் கிறிஸ்துவின் எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியும்படி அவர்களை வழிநடத்துகிறதா?'' என்று தங்களுக்குத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்வோமானால் நாம் வெற்றிபெறுகிறோம். இல்லா விட்டால் நாம் தோற்றுக்கொண்டிருக்கிறோம்.

தங்கள் பாவத்தைக் குறித்து மனந்திரும்பும்படி மக்களிடம் சொல்லாமல் வெறுமனே ''இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படி'' சொல்லும் சுவிசேஷகர் தோற்றுப் போகிறார். எல்லோரையும் சந்தோஷப்படுத்தியும், பல சமூக நடவடிக்கைகளில் ஈடுபடும்படி செய்தும், பெரிய சபையைக் கட்டியெழுப்ப முயலும் போதகர் தோற்றுப் போகிறார். சமீப காலத்திய கரிஸ்மாடிக் இயக்கத்தின் ''தந்திரமுள்ள போதகமாகிய பலத்த காற்றை'' மட்டும் போதிக்கிறவர்கள் தோற்றுப்போகிறார்கள். தாங்கள் இயேசுவை விசுவாசிப்பதாகச் சொல்லியும் அவருக்குக் கீழ்ப்படியாத மக்களைக் கொண்டிருக்கும் சபைகளை ஸ்தாபிக்கும் அப்போஸ்தலர் தோற்றுப் போகிறார். மக்களுக்கு வரப்போகும் ஆசீர்வாதங்களைக்குறித்து மட்டும் சொல்லும் தீர்க்கதரிசி தோற்றுக்கொண்டிருக்கிறார்.

## எனது தோல்வி

சில ஆண்டுகளுக்கு முன்னால் நான் ஒரு வளரும் சபைக்குப் போதகராக இருந்தபோது, பரிசுத்த ஆவியானவர் என்னிடம் ஒரு கேள்வியைக் கேட்டார். தேவனுடைய பொதுவான தரிசனத்தை நிறைவேற்றுவதில் நான் எவ்வளவாகக் குறைவுபட்டிருக்கிறேன் என்பதைக் காண அந்தக் கேள்வி எனக்கு உதவியது. மத்தேயு 25:31–46 வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளபடி செம்மறியாடுகளுக்கும் வெள்ளாடுகளுக்கும் நியாயத்தீர்ப்பு வழங்கப்படும் நிகழ்ச்சியை நான் வாசித்துக்கொண்டிருந்தபோது பரிசுத்த ஆவியானவர் என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்டார்: *''இன்று உன் சபையிலுள்ள எல்லோரும் மரித்து செம்மறியாடுகளுக்கும், வெள்ளாடுகளுக்குமுரிய நியாயத்தீர்ப்பில் நிற்பார்கள் என்றால், அதில் எத்தனை பேர் வெள்ளாடுகளாகவும், எத்தனை பேர் செம்மறியாடுகளாகவும் இருப்பார்கள்?''* அல்லது குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், *''கடந்த ஆண்டில் உன் சபையிலுள்ள எத்தனை பேர், கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகளுக்கு உணவளித்தார்கள், தாகமுள்ள கிறிஸ்தவர்களுக்குத் தண்ணீர் கொடுத்தார்கள், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களில் வீடற்றவர்களுக்கும், நாடோடிகளுக்கும் வீடுகளைக் கொடுத்தார்கள், ஆடையற்ற கிறிஸ்தவர்களுக்கு ஆடைகளைக் கொடுத்தார்கள், அல்லது நோயாளிகளான அல்லது சிறைப்பட்டிருக்கும் கிறிஸ்தவர்களைச் சென்று பார்த்தார்கள்?''* வெகு சிலரே இந்தக் காரியங்களையோ அல்லது இவைகளைப் போன்ற காரியங்களையோ செய்திருக்கிறார்கள் என்பதை நான் உணர்ந்தேன். ஆனால் அவர்கள் சபைக்கு வந்தார்கள், ஆராதனை கீதங்களைப் பாடினார்கள், என்னுடைய பிரசங்கங்களைக் கேட்டார்கள், காணிக்கைகளைக் கொடுத்தார்கள். அவர்கள் கிறிஸ்துவின் மதிப்பீட்டின்படி வெள்ளாடுகளாகவே இருந்தார்கள். கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகளின் தேவைகளை நாம் சந்திப்பது தேவனுக்கு எவ்வளவு முக்கியமான காரியம் என்பதைக் குறித்து நான் பிரசங்கிக்கத் தவறியபடியால் இந்தக் குற்றத்துக்கு நானும் காரணமாக இருக்கிறேன். கிறிஸ்துவின் எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியும்படி நான் அவர்களுக்குப் போதிக்கவில்லை. உண்மையில், தேவனுக்கு மிகவும் முக்கியமாக இருப்பதை நான் புறக்கணித்துவிட்டிருப்பதை உணர்ந்தேன் – இரண்டாவது பிரதான கற்பனையாகிய நம்மிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூர வேண்டும் என்ற கற்பனை. கிறிஸ்துவும் அவர் நம்மிடம் அன்புகாட்டுவதுபோல நாமும் ஒருவர் மற்றவரிடம் அன்புகாட்ட வேண்டும் என்ற புதிய கற்பனையைக் கொடுத்திருக்கிறார்.

இது மட்டுமல்ல, பிரபலமாகி வரும் ''செழிப்பைக் குறித்த சுவிசேஷத்தை'' ஓரளவு மட்டுப்படுத்தி நான் என் சபையாருக்குப் போதித்ததின் மூலம் சீஷர்களை உருவாக்க வேண்டும் என்ற





தேவனுடைய பொதுவான இலக்குக்கு விரோதமாகக் கிரியைசெய்யும் போதனையைக் கொடுத்துவந்திருக்கிறேன் என்பதையும் உணர்ந்தேன். தமது மக்கள் பூமியில் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கக் கூடாது என்பதும் [பார்க்க, மாற்கு 6:19–24], உண்ணவும் உடுக்கவும் மட்டுமே கிடைத்தாலும் மனதிருப்தியோடு இருக்க வேண்டும் என்பதும் [பார்க்க, எபி. 13:5; 1 தீமோ. 6:7–8] இயேசுவின் சித்தமாக இருந்தாலும், நான் ஏற்கெனவே பணக்காரர்களான என் அமெரிக்கச் சபையார் இன்னுமதிகமான உடைமைகளைப் பெற வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார் என்று போதித்திருக்கிறேன். நான் [உலகெங்கிலும் இலட்சக்கணக்கான போதகர்கள் செய்வதுபோல] ஒரு அம்சத்தில் எனது சபையார் இயேசுவுக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை என்றே நான் போதித்துக்கொண்டிருந்தேன்.

நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன் என்பதை உணர்ந்தவுடன் மனந்திரும்பி, எனது சபையாரிடம் என்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டேன். நான் சீஷர்களை உருவாக்கி, கிறிஸ்து கட்டளையிட்ட எல்லாவற்றுக்கும் கீழ்ப்படியும்படி அவர்களுக்குப் போதிக்கத் துவங்கினேன். என் சபையைச் சேர்ந்த சிலர் கிறிஸ்துவின் எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய விரும்பாமல், தியாகம்செய்யத் தேவையில்லாத சௌகரியமான கிறிஸ்தவத்தையே விரும்புகிறார்களோ என்ற சந்தேகத்தின் காரணமாகப் பயத்தோடு இதைச் செய்தேன். நான் சந்தேகப்பட்டது சரிதான். ஒரு சிலர் உலகெங்கிலுமுள்ள பாடுபடும் விசுவாசிகளைக் குறித்து எந்தவிதக் கரிசனையும் கொள்ளவில்லை. சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டிராதவர்களுக்கு அதை அறிவிப்பதைக் குறித்தும் அவர்கள் அக்கறை காட்டவில்லை. தங்களுக்காக இன்னுமதிகமாகப் பெறுவதிலேயே அவர்கள் அக்கறை காட்டினார்கள். பரிசுத்தத்தைப் பொருத்தவரையில் அவர்கள் மிகவும் மோசமான, அவிசுவாசிகளால்கூட ஏற்றுக்கொள்ளப்படாத பாவங்களை மட்டுமே ஒதுக்கிவைத்தார்கள். ஒரு சராசரியான அமெரிக்கனைப்போலவே அவர்கள் வாழ்ந்தார்கள். ஆனால் அவர்கள் இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய விரும்பாதபடியால் அவர்கள் மெய்யாகவே ஆண்டவரை நேசிக்கவில்லை. ஏனென்றால் நாம் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்போது அவரை நேசிக்கிறோம் என்பதை நிரூபிக்கிறோம் என்று அவர் சொல்லியிருக்கிறார் [பார்க்க, யோவான் 14:21].

நான் பயந்ததே உண்மையாகியது – கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்ட சிலர் செம்மறியாட்டின் தோலைத் தரித்த வெள்ளாடுகளாக இருந்தார்கள். அவர்கள் தங்களை ஒறுத்து, தங்கள் சிலுவையை எடுத்துக்கொள்ளும்படி நான் அழைப்புவிடுத்தபோது, சிலர் கோபப்பட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் சபையானது ஒரு கிளப்பைப்போல நல்ல இசையைக் கேட்கக்கூடிய ஒரு சமுதாய

அனுபவமாக மட்டுமே இருந்தது. அவர்களுடைய இரட்சிப்பையும், தேவன் அவர்களிடம் அன்புகாட்டுகிறார் என்பதையும் அது உறுதிப் படுத்துமானால் ஒருசில போதனைகளை அவர்களால் சகித்துக்கொள்ள முடிந்தது. ஆனால் தேவன் அவர்களிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பதற்குச் செவிகொடுக்க அவர்களுக்கு விருப்பமில்லை. எவரும் அவர்களுடைய இரட்சிப்பைக் குறித்துக் கேள்விகேட்பதையும் அவர்கள் விரும்பவில்லை. தேவனுடைய சித்தத்துக்கு ஏற்பத் தங்கள் வாழ்க்கையை மாற்றியமைக்க ஏதேனும் கிரயம் கொடுக்க நேரிடுமானால் அவர்கள் அதை வெறுத்தார்கள். தாங்கள் கொடுக்கும் பணத்தினால் தாங்கள் பயன்பெற முடியுமானால், அதாவது, அது சபையிலுள்ள வசதிகளை மேம்படுத்துமானால், தங்கள் பணத்தில் கொஞ்சத்தைக் கொடுக்க அவர்கள் முன்வந்தார்கள்.

## தன்னையே ஆராய்ந்து பார்க்க வேண்டிய வேளை

இந்த நூலை வாசிக்கும் ஒவ்வொரு ஊழியரும் பரிசுத்த ஆவியான வர் என்னிடம் கேட்ட கேள்வியைத் தனக்குத் தானே கேட்டுக் கொள்ளு வதற்கு இதுவே சரியான வேளையாகும்: *''இன்று உன் சபையிலுள்ள எல்லோரும் மரித்து செம்மறியாடுகளுக்கும், வெள்ளாடுகளுக்குமுரிய நியாயத்தீர்ப்பில் நிற்பார்கள் என்றால், அதில் எத்தனை பேர் வெள்ளாடுகளாகவும், எத்தனை பேர் செம்மறியாடுகளாகவும் இருப்பார்கள்?''* தங்கள் சபையில் செம்மறியாடுகளைப் போல நடிப்பவர் களிடம் போதகர்கள் அவர்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதாகக் கூறும்போது, தேவன் அவர்களிடம் என்ன கூற விரும்புகிறாரோ அதற்கு எதிர்மாறான ஒன்றையே அவர்கள் கூறுகிறார்கள். *இந்த ஊழியர் கிறிஸ்துவுக்கு விரோதமாகச் செயல்படுகிறார்.* மத்தேயு 25:31–46 வசனங்களின்படி இப்படிப்பட்ட மக்களிடம் என்ன சொல்ல வேண்டும் என்று இயேசு விரும்புகிறாரோ அதற்கு விரோதமாக இவர்கள் செயல்படுகிறார்கள். இயேசுவானவர் வெள்ளாடுகளை எச்சரிப்பதற்காகவே இவைகளைச் சொன்னார். தாங்கள் பரலோகத்துக்குப் போகப்போவதாக அவர்கள் நினைத்துக்கொள்ளக் கூடாது.

நாம் ஒருவர் மற்றவரிடம் அன்புகாட்டுவதால் நாம் அவருக்குச் சீஷர்களாக இருப்பதை எல்லோரும் அறிந்துகொள்ளுவார்கள் என்று இயேசு கூறினார் [பார்க்க, யோவான் 13:35]. கிறிஸ்தவரல்லாதவர்கள் ஒருவர் மற்றவரிடம் காட்டும் அன்பைவிட மேன்மையான அன்பைக் குறித்தே அவர் சொல்லியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவருடைய சீஷர்களை அவிசுவாசிகளிடமிருந்து வேறுபடுத்திக் காண முடியாதே? இயேசு குறிப்பிடும் அன்பு தன்னையே தியாகம்செய்யும் அன்பாகும். அது அவர் நம்மிடம் காட்டியதுபோல, ஒருவர் மற்றவருக்காக ஜீவனையும் கொடுக்கக் கூடிய அன்பாகும் [பார்க்க, யோவான் 13:4; 1 யோவான் 3:16–20]. ''நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு





நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று [மறுபடியும் பிறந்திருக்கிறோ மென்று] அறிந்திருக்கிறோம்'' என்று யோவான் எழுதியிருக்கிறார் [1 யோவான் 3:14]. கிறிஸ்துவின் கட்டளைகளைப் போதிக்கும் ஊழியர் களுக்கு விரோதமாக முறுமுறுத்து, அவர்களை வெறுக்கும் மக்கள் தாங்கள் மறுபடியும் பிறந்திருப்பதற்கு அடையாளமான அன்பை வெளிப் படுத்துகிறார்களா? இல்லை, அவர்கள் நரகத்தை நோக்கிச் செல்லும் வெள்ளாடுகளாக இருக்கிறார்கள்.

## சகல ஜாதியிலும் சீஷர்கள்

நாம் தொடர்ந்து செல்லுவதற்கு முன்பாக, இயேசுவானவர் தமது சீஷர்களுக்குக் கொடுத்த பிரதான மற்றும் பொதுவான கட்டளையாகிய மத்தேயு 28:19–20 வசனங்களை ஆராய்ந்து, இன்னும் ஏதேனும் சத்தியங் களைப் பெற முடிகிறதா என்று பார்ப்போம்:

> ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள் [மத். 28:19–20அ].

*சகல ஜாதிகளையும்* சீஷராக்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார் என்பதைக் கவனியுங்கள். கிரேக்க மூலத்தைப் பார்க்கும் போது, இது உலகத்திலுள்ள எல்லா *இனக் குழுக்களையும்* குறிப்பதை நாம் பார்க்கிறோம். இயேசுவானவர் கட்டளையிட்டிருக்கிறபடியால், இப்படிச் செய்ய முடியும் என்றே நான் விசுவாசிக்கிறேன். உலகத்திலுள்ள ஒவ்வொரு இனக்குழுவிலும் நாம் கிறிஸ்துவுக்காகச் சீஷர்களை உருவாக்க முடியும். ஆதியிலுள்ள பதினொரு சீஷர்களுக்கு மட்டுமே இந்தப் பொறுப்பு கொடுக்கப்படவில்லை, அதன்பிறகு வரும் ஒவ்வொரு சீஷருக்கும் இந்தப் பணி கொடுக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், பதினொரு ஆதிச் சீஷர்களுக்கும் தாம் உபதேசித்த *எல்லாவற்றையும்* கைக்கொள்ளும்படி *மற்றவர்களுக்குப்* போதிக்க வேண்டுமென்று இயேசு கட்டளையிட்டிருக்கிறார். எனவே, பதினொரு பேரும் *தங்கள்* சீஷர்களுக்கு எல்லா ஜாதிகளையும் சீஷராக்க வேண்டு மென்ற கட்டளையைப் போதித்தார்கள். தொடர்ந்து வரும் ஒவ்வொரு சீஷரும் இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும். *இயேசுவின் சீஷர் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு வகையில் சகல ஜாதிகளையும் சீஷராக்குவதில் ஈடுபட வேண்டும்.*

''பிரதான கட்டளை'' இன்னும் நிறைவேறாததற்கு இதுவும் ஒரு காரணமாகும். கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் இருந்தாலும், உண்மையில் இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படியும்படி ஒப்படைப்புக்

கொண்டிருக்கும் சீஷர்கள் குறைவாகவே இருப்பார்கள். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுபவர்களில் பெரும்பாலானவர்கள் கிறிஸ்து வின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்ற ஒப்படைப்பைக் கொண்டிராதபடியால் ஒவ்வொரு இனக்குழுவிலும் சீஷர்களை உருவாக்க வேண்டும் என்பதில் அக்கறை காட்டுவதில்லை. இதைக் குறித்துக் கேட்கும்போது, ''இது என்னுடைய ஊழியம் அல்ல'', ''இந்தத் திசையில் நான் வழிநடத்தப்படுவதாக நினைக்கவில்லை'' போன்ற சாக்குப் போக்குகளைச் சொல்லுகிறார்கள். எல்லா வெள்ளாடுகளும் கிறிஸ்துவின் கட்டளைகளில் எவை தங்களுக்குப் பொருத்தமாக இருக்கின்றன என்று தெரிந்தெடுத்துக்கொள்ளுவதைப்போல பல போதகர்களும் இப்படித்தான் பேசுகிறார்கள்.

கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் எல்லோரும் மெய்யாகவே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருப்பார் களானால், நீண்ட காலத்துக்கு முன்பே உலகத்திலுள்ள எல்லோரும் சுவிசேஷத்தைக் கேட்டிருப்பார்கள். கிறிஸ்துவின் சீஷர்களின் ஒட்டுமொத்த ஒப்படைப்பை இது நிகழும்படி செய்திருக்கும். அவர்கள் தாற்காலிகமானவைகளுக்காகவும், உலகப்பிரகாரமானவைகளுக்காகவும் தங்கள் பணத்தையும், நேரத்தையும் செலவழிப்பதை நிறுத்திவிட்டு, தங்கள் ஆண்டவர் கட்டளையிட்டிருக்கும் காரியங்களைச் செய்யும்படி அவைகளைப் பயன்படுத்தியிருப்பார்கள். என்றாலும், பயபக்தியுள்ள போதகர்கள் தங்கள் ஆராதனைகளில் ஒரு அருட்பணியாளர் பேசுகிறார் என்று அறிவிக்கும்போது, பெரும்பாலும் வருகைதருபவர்களின் எண்ணிக்கை குறைந்துபோவதையே அவர் எதிர்பார்க்க முடியும். வெள்ளாடுகளில் பெரும்பாலானவர்கள் வீட்டிலேயே இருந்துகொள்ளு வார்கள் அல்லது வேறு எங்காவது செல்லுவார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கடைசிக் கட்டளைக்குக் கீழ்ப்படிவதில் அவர்கள் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. ஆனால் செம்மறியாடுகளோ எல்லா ஜாதிகளை யும் சீஷராக்கும் வாய்ப்புகளை ஆர்வத்தோடு பிடித்துக்கொள்ளுகிறார்கள்.

மத்தேயு 28:18–20 வசனங்களைக் குறித்த ஒரு கடைசிக் குறிப்பு: தமது சீஷர்கள் அவர்களுடைய சீஷர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்றும் இயேசுவானவர் கட்டளையிட்டார். அப்போஸ்தலர் இந்தக் கட்டளைக்கு உண்மையோடு கீழ்ப்படிந்தார்கள். மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்தவர்களுக்கு அவர்கள் உடனடி யாக ஞானஸ்நானம் கொடுத்தார்கள். ஞானஸ்நானம் என்பது ஒரு விசுவாசி கிறிஸ்துவின் மரணம், அடக்கம்பண்ணப்படுதல், உயிர்த்தெழுதலோடு ஒருமுகப்படுவதைக் காட்டுகிறது. புதிய விசுவாசிகள் மரித்து, கிறிஸ்து வுக்குள் புதிய சிருஷ்டிகளாக எழுகிறார்கள். ஒவ்வொரு புதிய விசுவாசி யின் ஞானஸ்நானத்திலும் இந்தச் சத்தியம் சுட்டிக்காட்டப்பட வேண்டு மென்று இயேசுவானவர் விரும்பினார். இது விசுவாசியின் மனதில் தான்





இப்போது ஒரு புதிய இயல்பைக் கொண்ட புதிய நபராக இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. அவன் கிறிஸ்துவோடு ஆவியில் ஒன்றுபட்டிருக் கிறான். இப்போது அவனுக்குள் வாசம்பண்ணும் கிறிஸ்துவின் மூலமாகத் தேவனுக்குக் கீழ்ப்படியும்படி அவன் பலப்படுத்தப்பட்டிருக்கிறான். அவன் தனது பாவங்களில் மரித்துப்போனவனாக இருந்தான். ஆனால் இப்போது அவன் சுத்தமாகக் கழுவப்பட்டு, பரிசுத்த ஆவியானவரால் உயிர்ப்பிக்கப் பட்டிருக்கிறான். அவன் வெறுமனே ''மன்னிக்கப்படவில்லை.'' மாறாக, அவன் *முற்றிலுமாக மாற்றப்பட்டிருக்கிறான்*. இப்படியாக, மெய்யான விசுவாசிகள் வித்தியாசமான மக்கள் என்பதைத் தேவன் மறுபடியுமாகச் சுட்டிக்காட்டுகிறார். அவர்கள் ஆவிக்குரியபிரகாரமாக மரித்தநிலை யிலிருந்து இப்போது வேறுபட்ட வகையில் செயல்படுகிறார்கள். இது இயேசுவின் இறுதி வார்த்தைகளிலும் உறுதியாகச் சுட்டிக்காட்டப்படு கிறது: ''இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்'' [மத். 28:20]. கிறிஸ்து தொடர்ந்து தமது மக்களோடு இருப்பது அவர்களுடைய நடத்தையில் தாக்கத்தை விளைவிக்கும் அல்லவா?

## இயேசு சீஷத்துவத்துக்கு விளக்கம் கொடுக்கிறார்

சீஷர்களை உருவாக்க வேண்டும் என்பதே இயேசு நமக்குக் கொடுத்திருக்கும் முக்கியமான இலக்கு என்பதை நாம் பார்த்திருக் கிறோம். இந்தச் சீஷர்கள் தங்கள் பாவங்களைக் குறித்து மனந்திரும்பி, கிறிஸ்துவின் கட்டளைகளைக் கற்றுக்கொண்டு, அவைகளுக்குக் கீழ்ப்படிந்து வருகிறார்கள். சீஷன் என்பவன் யார் என்று இயேசுவானவர் யோவான் 8:31, 32 வசனங்களில் விளக்கம் கொடுத்திருக்கிறார்:

> நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.

இயேசுவைப் பொறுத்தவரையில் மெய்யான சீஷர்கள் அவருடைய உபதேசத்தில் தரித்திருக்கிறார்கள் அல்லது அதைத் தங்கள் இருப்பிட மாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அவருடைய வார்த்தை யிலிருந்து சத்தியத்தைக் கற்றுக்கொள்ளும்போது, படிப்படியாக ''விடுதலையாக்கப்படுகிறார்கள்.'' இந்தப் பின்னணியைப் பார்க்கும் போது, இயேசு பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுவதையே குறிப்பிடு கிறார் என்பது தெளிவாகிறது [பார்க்க, யோவான் 8:34–36]. எனவே மறுபடியுமாக இயேசுவின் விளக்கத்தின்மூலமாகச் சீஷர்கள் என்பவர்கள் அவருடைய கட்டளைகளைக் கற்றுக்கொண்டு அவைகளுக்குக் கீழ்ப்படிகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளுகிறோம்.

இயேசு பின்பு இவ்வாறு சொல்லியிருக்கிறார்:

> நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள் [யோவான் 15:8 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இவ்வாறு, இயேசு கொடுக்கும் விளக்கத்தின்படி சீஷர்கள் கனி கொடுப்பதின்மூலம் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். கனிகொடுக்காத வர்கள் தாங்கள் கிறிஸ்துவின் சீஷர்கள் என்பதை நிரூபிக்கவில்லை.

கனிகொடுப்பது தமது சீஷர்களுக்கு அடையாளமாக இருக்கிறது என்பதை இயேசு லூக்கா 14:25–33 வசனங்களில் இன்னும் குறிப்பாகச் சொல்லியிருக்கிறார். 25ஆம் வசனத்தை வாசிப்பதின்மூலம் நாம் துவங்கு வோமாக:

> பின்பு அநேக ஜனங்கள் அவரோடேகூடப் பிரயாண மாய்ப் போகையில், அவர்களிடமாய் அவர் திரும்பிப் பார்த்து...

திரளான மக்கள் தம்மோடுகூடப் ''பிரயாணமாய்ப் போவதைக்'' கண்டு இயேசு திருப்திப்பட்டாரா? திரளான மக்களை ஒன்று சேர்த்திருப் பதின்மூலம் அவர் இப்போது தமது இலக்கை எட்டிவிட்டாரா?

இல்லை, திரளான மக்கள் தம்மைச் சுற்றியிருந்து, தமது பிரசங்கங் களுக்குச் செவிகொடுத்து, தமது அற்புதங்களைப் பார்த்து, சில வேளைகளில் அவருடைய உணவைச் சாப்பிடுவதினால் இயேசு திருப்தியடைந்தாரா? தேவனிடம் தங்கள் முழு இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும் அன்புகாட்டும் மக்களையே இயேசு தேடிக்கொண்டிருந்தார். மக்கள் தமது கட்டளை களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். *சீஷர்களைப்* பெறவே அவர் விரும்புகிறார். எனவே அவர் தம்மோடுகூடப் பயணமாகச் செல்லும் மக்களிடம் இவ்வாறு கூறினார்:

> யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான் [லூக்கா 14:26].

இதைக் குறித்து எந்தவிதச் சந்தேகமும் இல்லை: தமது சீஷர் களாக இருக்கக்கூடியவர்களுக்கு இயேசு ஒரு தகுதியை அறிவித்தார். இதனால் அவருடைய சீஷர்கள் தாங்கள் இயல்பாக அதிகமாக நேசிக்கும் மக்களை வெறுக்க வேண்டுமா? ஆனால் நாம் நமது பெற்றோரைக் கனம்பண்ண வேண்டும் என்றும், வாழ்க்கைத் துணை யிடமும் பிள்ளைகளிடமும் அன்புகாட்ட வேண்டும் என்றும் வேதாகமத் தில் சொல்லப்படிருக்கிறபடியால், அவர்களை வெறுக்க வேண்டும் என்று அவர் சொல்லியிருக்க மாட்டார்.





இயேசுவானவர் அழுத்தம்கொடுப்பதற்காக மிகைப்படுத்தி உயர்வுநவிற்சி அணியில் இதைக் கூறியிருக்கிறார் என்பதே சரியாகும். குறைந்தபட்சமாக அவர் கூறியதின் அர்த்தம் இதுவாகவே இருக்க வேண்டும்: நாம் அவருடைய சீஷர்களாக இருக்க வேண்டுமானால், அவரிடம் மிக அதிகமாக, நாம் இயல்பாக அன்புகாட்டுகிறவர்களைவிட அதிகமாக அன்புகாட்ட வேண்டும். இயேசுவானவர் தேவனாக இருக்கிற படியால், அவருடைய எதிர்பார்ப்பு நியாயமானதாக இருக்கிறது. நாம் தேவனிடம் நமது முழு இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமா வோடும், பலத்தோடும் அன்புகூர வேண்டும் அல்லவா?

ஊழியர்களின் பணி சீஷர்களை உருவாக்குவதே என்பதை மறந்துவிடாதீர்கள். அதாவது இயேசுவின்மீது முதன்மையான அன்பு காட்டுகிறவர்களை, தங்கள் பெற்றோரையும், வாழ்க்கைத் துணையை யும், பிள்ளைகளையும்விட அவரிடம் அதிகமாக அன்புகாட்டுகிறவர் களை அவர்கள் உருவாக்க வேண்டும். இதை வாசிக்கும் ஒவ்வொரு ஊழியரும் *''இப்படிப்பட்ட மக்களை உருவாக்குவதில் நான் வெற்றி பெறுகிறேனா?''* என்று தனக்குத்தானே கேட்டுக்கொள்ள வேண்டும்.

ஒருவர் இயேசுவிடம் அன்புகாட்டுகிறார் என்பதை நாம் எப்படி அறிய முடியும்? யோவான் 14:21 வசனத்தில் இயேசு இவ்வாறு சொல்லியிருக்கிறார்: ''என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக் கிறான்.'' எனவே இயேசுவைத் தங்கள் பெற்றோரையும், வாழ்க்கைத் துணையையும், பிள்ளைகளையும் நேசிப்பதைவிட அதிகமாக நேசிப்ப வர்கள், அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் மக்களாகவும் இருக்கிறார்கள் என்ற முடிவுக்கு நம்மால் வர முடியும். இயேசுவின் சீஷர்கள் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறார்கள்.

## இரண்டாவது தகுதி

இயேசு தம்மோடுகூட வந்த மக்களிடம் தொடர்ந்து இவ்வாறு கூறினார்:

> தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான் [லூக்கா 14:27].

இது இயேசுவானவர் தமது சீஷர்களிடம் எதிர்பார்க்கும் இரண்டாவது தகுதியாகும். அவர் சொல்லியிருப்பதின் அர்த்தம் என்ன? அவருடைய சீஷர்கள் தங்களோடுகூட பெரிய மரத்துண்டுகளைச் சுமந்து செல்ல வேண்டுமா? இல்லை, இயேசு மறுபடியுமாக உயர்வு நவிற்சி அணியைப் பயன்படுத்துகிறார்.

அங்கு திரளாகக் கூடியிருந்த யூதர்களில் பெரும்பாலானவர்கள் குற்றவாளிகள் சிலுவையில் அறையப்படுவதைக் கண்டிருப்பார்கள்.

சிலுவையில் அறையப்படுவதை மற்றவர்கள் காண்பதின்மூலம் குற்றங்களைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ரோமர்கள் பட்டணத்துக்கு வெளியே முக்கிய சாலையோரத்தில் குற்றவாளிகளைச் சிலுவையில் அறைந்தார்கள்.

இதன் காரணமாக, இயேசுவின் நாட்களில் ''உன் சிலுவையைச் சுமத்தல்'' என்பது பொதுவான பேச்சாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். சிலுவையில் அறையப்பட்ட ஒவ்வொரு நபரிடமும் ரோமப் போர்ச்சேவர்கள் ''உன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வா'' என்று கட்டளையிட்டார்கள். இது பல மணி நேரங்கள் அல்லது நாட்கள் பயங்கரமான வேதனைக்குத் துவக்கமாக இருந்தபடியால், குற்றவாளிகள் இந்த வார்த்தைகளைக் கேட்டு நடுங்கினார்கள். எனவே இப்பட்ட ஒரு சொற்றொடர் அந்த நாட்களில் ''உன்னுடைய வழியில் வரும் தவிர்க்க முடியாத கஷ்டத்தை ஏற்றுக்கொள்'' என்ற அர்த்தத்தைக் கொடுத்தது.

தகப்பன் தன் பிள்ளைகளிடம் ''பிள்ளைகளே, கழிவறையின் அசுத்தத்தை வெட்டிச் சுத்திகரிப்பதை நீங்கள் வெறுக்கிறீர்கள் என்று நான் அறிவேன். அது துர்நாற்றமடிக்கும் அசுத்தமான வேலைதான். ஆனால் மாதம் ஒரு முறை அது உங்கள் பொறுப்பாக இருக்கிறது. *எனவே, உங்கள் சிலுவையை எடுத்துக்கொள்ளுங்கள்.* கழிவறையை வெட்டிச் சுத்திகரியுங்கள்'' என்று சொல்லுவதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. மனைவிமார் தங்கள் கணவன்மாரிடம் ''அன்பே, ரோமருக்கு வரி செலுத்துவதை நீங்கள் எவ்வளவாக வெறுக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் இன்று நாம் வரி செலுத்த வேண்டிய கடைசி நாளாகும். ஆயக்காரன் அதோ தெருவில் வந்துகொண்டிருக்கிறான். *எனவே உங்கள் சிலுவையை எடுத்துக் கொள்ளுங்கள்.* அந்த மனிதனிடம் வரியைச் செலுத்துங்கள்'' என்று சொல்லுவதையும் என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது.

ஒருவர் தன்னுடைய சிலுவையை எடுத்துக்கொள்ளுவது சுய ஒறுத்தலுக்கு அடையாளமாக இருக்கிறது. அந்த அர்த்தத்தில்தான் இயேசு மத்தேயு 16:24 வசனத்தில் அதைப் பயன்படுத்தினார்: ''ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன். '' இதற்கு ''எவனாவது என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தனது சொந்த செயல்திட்டத்தை ஒதுக்கிவைத்துவிட்டு, தனது தீர்மானத்தின் பின்விளைவாக வரக் கூடிய தவிர்க்கமுடியாத கஷ்டத்தை ஏற்றுக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்'' என்று விளக்கம் கொடுக்கலாம்.

எனவே இயேசுவைப் பின்பற்றுவதற்காகப் பாடுபடவும் மெய்யான சீஷர்கள் சித்தமாக இருந்தார்கள். அவர்கள் துவங்குவதற்கு முன்பே





கிரயத்தை எண்ணிப்பார்த்து, தவிர்க்கமுடியாத துன்பத்தை உணர்ந்து, பந்தயத்தை ஓடி முடிக்க வேண்டும் என்ற தீர்மானத்தோடு புறப்பட்டிருக்கிறார்கள். அடுத்துத் தம்மைப் பின்பற்றுவதின் கிரயத்தைக் குறித்து இயேசு கூறிய வார்த்தைகள் இந்த அர்த்தத்துக்கு ஆதரவாக இருக்கின்றன. அவர் இரண்டு எடுத்துக்காட்டுகளின் மூலம் தமது கருத்தை வலியுறுத்தினார்:

> உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து, அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத் திராணியில்லாமற்போனால், பார்க்கிறவர்களெல்லாரும்: இந்த மனுஷன் கட்டத்தொடங்கி, முடிக்கத் திராணியில்லாமற்போனான் என்று சொல்லித் தன்னைப் பரியாசம்பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப் பாராமலிருப்பானோ? அன்றியும் ஒரு ராஜா மற்றொரு ராஜாவோடே யுத்தஞ்செய்யப் போகிறபோது, தன்மேல் இருபதினாயிரம் சேவகரோடே வருகிற அவனைத் தான் பதினாயிரம் சேவகரைக் கொண்டு எதிர்க்கக் கூடுமோ கூடாதோ என்று முன்பு உட்கார்ந்து ஆலோசனை பண்ணாமலிருப்பானோ? கூடாதென்று கண்டால், மற்றவன் இன்னும் தூரத்திலிருக்கும் போதே, ஸ்தானாபதிகளை அனுப்பி, சமாதானத்துக்கானவைகளைக் கேட்டுக்கொள்வானே [லூக்கா 14:28–32].

இயேசுவானவர் தமது கருத்தை மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறார்: ''நீ எனக்குச் சீஷனாக இருக்க விரும்பினால், காரியங்கள் கடினமாகும்போது விட்டுவிலகாதிருக்கும்படியாக, முன்கூட்டியே கிரயத்தைக் கணக்கிட்டுப் பார். என்னைப் பின்பற்றுவதினால் வரும் துன்பத்தை மெய்யான சீஷர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.''

## மூன்றாவது தகுதி

அன்று இயேசுவானவர் அந்தத் திரளான மக்களுக்கு சீஷத்துவம் குறித்த மற்றொரு தகுதியைக் குறித்தும் அறிவித்தார்:

> அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்து விடாவிட்டால், அவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான் [லூக்கா 14:33].

மறுபடியுமாக, இயேசு உயர்வுநவிற்சி அணியைப் பயன்படுத்துகிறார் என்ற முடிவுக்கு நாம் வர முடியும். நாம்

இருப்பிடமோ, ஆடையோ அல்லது உணவோ இல்லாத அளவுக்கு எல்லா உடைமைகளையும் வெறுத்துத் தள்ள வேண்டும் என்று அவர் சொல்லவில்லை. ஆனால் தேவனே நமது உடைமைகளுக்குச் சொந்தக்காரராக இருக்கும்படி நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும். நாம் இனிமேலும் பணத்தைச் சேவிக்கிறவர்களாக இராமல் நமது பணத்தைக் கொண்டு தேவனைச் சேவிக்க வேண்டும். இதன் விளைவாக அப்போஸ்தலரின் நடபடிகள் புத்தகத்தில் நாம் காணும் ஆதிக் கிறிஸ்தவர்களைப் போல நாம் தேவையில்லாத உடைமைகளை விட்டுவிட்டு, உக்கிராணத்துவம் மற்றும் பகிர்ந்துகொடுத்தலின் பயபக்தியான எளிய வாழ்க்கை வாழ வேண்டியிருக்கும். கிறிஸ்துவின் சீஷர்களாக இருப்பது என்றால் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதாகும். தம்மைப் பின்பற்றுகிறவர்கள் பூமியில் பொக்கிஷங் களைச் சேர்த்துவைக்காமல், பரலோகத்தில் சேர்த்துவைக்க வேண்டும் என்று அவர் கட்டளையிட்டிருக்கிறார்.

இயேசுவானவரைப் பொருத்தவரையில் நான் அவருடைய சீஷனாக இருக்க வேண்டுமானால், நான் அதிகமாகக் கனிகொடுக்க வேண்டும். எனது குடும்ப உறுப்பினர்களிடம் நான் அன்புகாட்டுவதை விட அவரிடம் அதிகமாக அன்புகாட்ட வேண்டும். அவரைப் பின்பற்றும் படியாக நான் எடுத்திருக்கும் தீர்மானத்தின் காரணமாக வரவிருக்கும் தவிர்க்க முடியாத துன்பங்களை நான் எதிர்நோக்கச் சித்தமுள்ளவனாக இருக்க வேண்டும். மேலும், என்னுடைய வருமானத்தையும் உடைமை களையும் கொண்டு அவர் என்ன கூறுகிறாரோ அதை நான் செய்ய வேண்டும். (அவருடைய கட்டளைகளில் பல இதைக் குறித்து ஏதாகிலும் சொல்லுகின்றன. எனவே பலர் செய்வதுபோல ''ஆண்டவர் எனது எல்லா உடைமைகளையும் கொண்டு எதையேனும் செய்யும்படி எனக்குத் தனிப்பட்ட முறையில் சொல்லுவாரானால், அவர் கூறியதை நான் செய்ய வேண்டும்'' என்று சொல்லி என்னை நானே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது).

*இவர்களே கிறிஸ்துவை ஒப்படைப்புடன் பின்பற்றுகிறவர்களாக இருக்கிறார்கள். ஊழியர்களாகிய நாம் இவர்களையே உருவாக்க வேண்டும்!* இதுவே தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இலக்காகும். நாம் சீஷர்களை உருவாக்கும் ஊழியர்களாக இருக்கும் படி அழைக்கப்பட்டிருக்கிறோம்!

இது உலகெங்கிலும் பல ஊழியர்கள் காணத் தவறும் அடிப்படைச் சத்தியமாகும். நான் செய்ததுபோல அவர்கள் தங்கள் ஊழியத்தைச் சீர்தூக்கிப் பார்ப்பார்களானால், நான் முடிவுக்கு வந்ததுபோல அவர்களும் தாங்கள் தேவனுடைய வாஞ்சை மற்றும் எதிர்பார்ப்புக்கு அதிகமாகக் குறைவுபடுகிறோம் என்ற முடிவுக்கே வர வேண்டும். கிறிஸ்துவுக்காக எனது சபை மக்கள் கொண்டிருக்கும் ஒப்படைப்பின் அளவை நான்





சீர்தூக்கிப் பார்த்தபோது, மெய்யான சீஷர்கள் என்று வகைப்படுத்தப்பட முடியாத பலர் இருந்தார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

போதகர்களே, உங்கள் சபையைப் பாருங்கள். லூக்கா 14:26–33 வசனங்களின்படி உங்கள் சபையாரில் எத்தனை பேர்களை இயேசு தமது சீஷர்களாக ஏற்றுக்கொள்ளுவார்? சுவிசேஷர்களே, நீங்கள் கொடுக்கும் செய்தி கிறிஸ்துவின் எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியும்படி தங்களை ஒப்புக்கொடுக்கும் மக்களை உருவாக்குகிறதா?

இறுதித் தீர்ப்புக்காக நாம் இயேசுவுக்கு முன்பாக நிற்பதற்கு முன்பாக நமது ஊழியங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கான நேரம் இதுவே யாகும். அவருடைய இலக்குக்கு நான் குறைவுபடுகிறேன் என்றால் அதை இப்போதே கண்டுபிடிப்பது நல்லது அல்லவா? நீங்களும் அப்படிச் செய்வீர்கள் அல்லவா?

## ஒரு இறுதியான ஜாக்கிரதையுள்ள சிந்தனை

லூக்கா 14:26–33 வசனங்களில் இயேசு திரளான மக்களிடம் சொல்லியதுபோல, மக்கள் தமது சீஷர்களாக வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பது தெளிவாக இருக்கிறது. அவருடைய சீஷராக மாறுவது எவ்வளவு முக்கியமானது? ஒருவர் அவருடைய சீஷராக இருப்பதைத் தெரிந்துகொள்ளாவிட்டால் என்ன? லூக்கா 14ஆம் அதிகாரத்தில் தமது சொற்பொழிவின் இறுதியில் இயேசு இந்தக் கேள்விகளுக்குப் பதிலளித்தார்:

> உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்? அது நிலத்துக்காகிலும் எருவுக் காகிலும் உதவாது, அதை வெளியே கொட்டிப் போடுவார்கள். கேட்கிறதுக்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் (லூக்கா 14:34–35).

இது தொடர்பில்லாமல் சொல்லப்பட்ட ஒரு வாசகம் அல்ல என்பதைக் கவனியுங்கள்.

உப்பானது உப்புத்தன்மையுடன் இருக்க வேண்டும். அதுதான் அதை உப்பாக ஆக்குகிறது. அது தன் சாரத்தை இழந்துபோனால், ஒன்றுக்கும் பயனில்லாததாக ஆகி, வெளியே எறியப்படும்.

ஒரு சீஷராக இருப்பதற்கும் இதற்கும் உள்ள தொடர்பு என்ன? உப்பானது சாரத்தோடு இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதுபோல, மக்கள் தமது சீஷர்களாக இருக்க வேண்டும் என்று இயேசு எதிர்பார்க் கிறார். அவர் தேவனாக இருக்கிறபடியால், அவரை மிகவும் மேலாக நேசித்து, நமது உடைமைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, நமது சிலுவையை எடுத்துக்கொள்ளும் கடமை நமக்கு உண்டு. நாம் அவருடைய சீஷராக மாறாவிட்டால், நாம் ஏன் இருக்கிறோம்

என்பதற்கான அவருடைய காரணத்தையே புறக்கணிக்கிறோம். நாம் ஒன்றுக்கும் பயனில்லாமல் ‘‘எறிந்துபோடத்’’ தக்கவர்களாக இருக்கிறோம். நாம் பரலோகத்தைவிட்டு எறிந்துபோடப்படுவோம் அல்லவா?

மற்றொரு வேளையில் இயேசு தமது சீஷர்களிடம் இவ்வாறு கூறினார் [பார்க்க, மத். 5:13]:

> நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப் படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது [மத். 5:13].

இவை உண்மையில் ஜாக்கிரதையுள்ள எச்சரிப்புகளாக இருக் கின்றன. முதலாவதாக, உப்பாயிருப்பவர்கள் [‘‘முழுமையான ஒப்படைப்புக்குத்’’ தெளிவான உருவகமாகும்] தேவனால் பயன்படுத்தப் படக்கூடியவர்களாக இருக்கிறார்கள். மற்றவர்களோ வெளியே கொட்டிப்போடப்படுவதற்கே தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். இரண்டாவதாக, ‘‘உப்பாக’’ இருப்பவர்கள் தங்கள் சாரத்தை இழந்து போகவும் கூடும், அதனால்தான் இயேசு தமது சீஷர்களுக்கு எச்சரிப்புக் கொடுக்க வேண்டியிருந்தது. இந்தச் சத்தியங்களுக்கு முரண்பாடாக இன்று பலரும் போதித்துவருகிறார்கள். ஒருவர் கிறிஸ்துவின் சீஷராக இல்லாவிட்டாலும் பரலோகத்துக்குப் போகும் விசுவாசியாக இருக்க முடியும் என்றும், ஒருவர் தனது இரட்சிப்பின் நிலையை இழக்க முடியாது என்றும் போதித்துவருகிறார்கள். அடுத்துவரும் அத்தியாயங் களில் நாம் இந்தப் பிழையான கருத்துக்களைக்குறித்து இன்னும் தெளிவாகப் பார்ப்போம்.



# 2

# சரியாகத் துவங்குதல்

வேதாகமரீதியாகச் சொல்லுவோமானால், ஒரு சீஷர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உண்மையான விசுவாசியாக இருக்கிறார். அவர் கிறிஸ்துவின் உபதேசத்தில் தரித் திருந்து, அதன் விளைவாகப் பாவத்திலிருந்து விடுவிக்கப்படுகிறார். கிறிஸ்துவின் எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியும்படி கற்றுக் கொண்டிருப்பவரே சீஷராக இருக்கிறார். இவர் தனது சொந்தக் குடும்பத்துக்கும், சொந்தச் சௌகரியத்துக்கும், தனது உடைமைகளுக் கும் மேலாகக் கிறிஸ்துவிடம் அன்புகாட்டுகிறார். தனது வாழ்க்கை முறையின் மூலம் அந்த அன்பை வெளிப்படுத்துகிறார். இயேசுவின் மெய்யான சீஷர்கள் ஒருவர் மற்றவர்மீது அன்புகாட்டுகிறார்கள், செயல்பூர்வமான வழிகளின் மூலம் அந்த அன்பை வெளிப்படுத்து கிறார்கள். அவர்கள் கனிகொடுக்கிறார்கள்.[1] இப்படிப்பட்ட மக்களே இயேசுவுக்குத் தேவைப்படுகிறார்கள்.

கிறிஸ்துவுக்குச் சீஷர்களாக இல்லாதவர்களால் அவருக்குச் சீஷர்களை உருவாக்க முடியாது. எனவே, எவரையாவது கிறிஸ்துக்குச் சீஷராக ஆக்க முயலுவதற்கு முன்பாக நாம் அவருக்குச் சீஷராக இருக்கிறோமா என்பதை ஆராய்ந்துபார்க்க வேண்டும். சீஷர்களைக் குறித்த வேதாகமரீதியான விளக்கத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பல ஊழியர்கள் குறைவுபடுகிறார்கள். அப்படிப்பட்ட ஊழியர்களால் சீஷர்களை உருவாக்க முடியும் என்பதற்கு எந்த நம்பிக்கையும் இல்லை, அவர்கள் அதற்காக முயற்சிசெய்யவும் மாட்டார்கள். மெய்யான சீஷர்களை உருவாக்கும் வேளையில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் துன்பங்களைச் சகித்துக்கொள்ளும் அளவுக்கு

[1] நாம் ஏற்கெனவே வாசித்த மத்தேயு 28:18–20, யோவான் 8:31–32; 13:25, 15:8 மற்றும் லூக்கா 14:25–33 வசனங்களிலிருந்து இந்த விளக்கம் தொகுக்கப் பட்டுள்ளது.